Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ் Mirror www.tamilmirror.lk

WEDNESDAY, OCTOBER 4, 2023

புதன்கிழமை ஒக்டோபர் 04, 2023 | ஒளி: 09 கதிர் 098 | பக்கம்:06 | நகரப்பதிப்பு★ | Free

# பேக்கரி பொருட்களின் விலைகளும் உயரும்

மீண்டும் மின்கட்டணம் அதிகரிக்கப்பட்டால், பேக்கரி உற்பத்திப் பொருட்களின் விலையை அதிகரிக்க நேரிடும் என சிறு மற்றும் நடுத்தர அளவிலான பேக்கரி உரிமையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.



தொடர்ச்சி P2

# “எங்கள் கைகள் இணையட்டும்;அடிமை விலங்குகள் உடையட்டும்”

**மனிதச்சங்கிலி போராட்டம் மருதனார் மடசந்தியில் இருந்து புதன்கிழமை (04) காலை 9 மணியளவில் ஆரம்பிக்கப்படும்**

**பேரினவாத அடக்குமுறைக்கு ஏதிராக மனிதச்சங்கிலி போராட்டத்திற்கு வலுசேர்க்க அழைப்பு**

■ புகஜிந்தன், டிவிஜித்தா

தமிழ் தேசியக்கட்சிகளின் ஒன்றிணைந்த எற்பாட்டில் பேரினவாத அடக்குமுறைக்கு ஏதிராக மனிதச்சங்கிலி போராட்டத்திற்கு வலுசேர்க்கும் முகமாக துண்டுப் பிரசுரங்கள் யாழ்ப்பாணம் சுன்னாகம் மத்திய பேருந்து நிலையத்தில் இருந்து விநியோகிக்கப்பட்டன.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் (புளொட்) தர்மலிங்கம் சித்தார்த்தன் துண்டுப்பிரசுரங்கள் விநியோகித்தார்.

வியாபார ஸ்தாபனங்கள், சந்தை நடத்துனர்கள், வாடிக்கையாளர்கள், பேரூந்து பயணிகளுக்கு துண்டுப்பிரசுரங்கள் ஆகியவற்றுக்கு வழங்கி வைக்கப்பட்டன.

பேரினவாத அடக்குமுறைக்கு ஏதிராக மனிதச்சங்கிலி போராட்டம் மருதனார் மடசந்தியில் இருந்து புதன்கிழமை (04) ஆரம்பிக்கப்படும் குறிப்பிடத்தக்கது.

அந்த துண்டுப்பிரசுரத்தில், “எங்கள் கைகள் இணையட்டும் அடிமை விலங்குகள் உடையட்டும்” என்று அழைப்பு விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.





# சர்வதேச விசாரணை இல்லை, முற்றுப்புள்ளி

## Deutsche Welle நேர்காணலில் கோபமடைந்தார் ஜனாதிபதி

Deutsche Welle உடனான நேர்காணலில் இருந்து வெளியேறுவதாக எச்சரித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான சர்வதேச விசாரணையை நிராகரித்ததுடன், முற்றுப்புள்ளி என பதிலளித்தார்.

இந்த நேர்காணலின் போது அவ்வப்போது கடுமையாக கோபமடைந்து பதிலளித்த ஜனாதிபதி ரணில் மேற்கத்தைய நாடுகள் இலங்கையை, இரண்டாம் வகுப்பாக பார்க்கிறதா? என்றும் கேள்வி எழுப்பினார்.

தொடர்ச்சி P2



# சிறுவர்கள் யாசிப்பதை தடுப்பதற்கு விசேட குழு

சிறுவர்களை யாசகத்துக்குப் பயன்படுத்துவதைத் தடுப்பதற்கான பொறிமுறையொன்றைப் பரிந்துரைப்பதற்கு விசேட குழுவொன்றை நியமிப்பதற்கு மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவில் தீர்மானிக்கப்பட்டது.

தொடர்ச்சி P2

முல்லை நீதிபதிக்கு யாராவது

# அழுத்தம் கொடுத்திருந்தால் அவமதிப்பு வழக்கு தொடருக

**நீதியமைச்சர் விஜேதாஸ சபையில் தெரிவிப்பு**

முல்லைத்தீவு நீதிபதி சரவணராஜாவுக்கு யாராவது அழுத்தம் கொடுத்திருந்தால் அரசாங்கத்தை குறைகூறுவதை விடுத்து அது தொடர்பில் நீதிமன்ற அவமதிப்பு வழக்குத் தொடருமாறு நீதியமைச்சர் விஜேயதாஸ ராஜபக்ச, எதிர்க்கட்சிக்கு சவால் விடுத்தார்.

முல்லைத்தீவு நீதிபதியின் தீர்ப்பை மாற்றுமாறு அவருக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டதாக எதிர்க்கட்சியின் பிரதம கொறடா லக்ஷமன் கிரியெல்ல,

தொடர்ச்சி P2





நீதிபதி சரவணராஜாவுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராக

# வடக்கு, கிழக்கில் நீதிமன்றங்கள் முடங்கின

■ தமிழ்மிரர் நிருபர்கள்

முல்லைத்தீவு நீதிபதி ரீ. சரவணராஜாவுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராக வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த சட்டத்தரணிகளால் செவ்வாய்க்கிழமை (03)

தொடர்ச்சி P2

# ரூ. 4 கோடி பெறுமதியான 35 கிலோ கிராம் ஹஷீஸ் மீட்பு

நான்கு கோடியே 20 இலட்சம் ரூபாய் பெறுமதியான 35 கிலோ கிராம் ஹஷீஸ் போதைப்பொருள் ஒருகொடவத்தை சுங்க வருமான கண்காணிப்பு பிரிவின் பரிசோதனை

தொடர்ச்சி P2



சுமந்திரன் எம்.பி அல்லாது

# சாதாரண பிரஜையொருவர் பேசியிருந்தால் கடூழியசிறை

**பிள்ளையானின் வழக்கில் உயர்நீதிமன்ற நீதியரசர் நவாஸின் கட்டளைகளையும் சுட்டிக்காட்டியிருந்தார்**

பாராளுமன்றத்தில் சுமந்திரன் எம்.பி பேசியதைப் போன்று வேறு ஒருவர் பேசியிருந்தால் அவருக்கு கடூழிய சிறைத் தண்டனை விதிக்கப்பட்டிருக்கும் என்று நீதியமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ எச்சரிக்கை விடுத்தார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (03) விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றிய தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், நாட்டின் நீதிமன்ற கட்டமைப்பின் சுயாதீனத்தன்மை கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளது என்றும் பிள்ளையானின் வழக்கில் உயர்நீதிமன்ற நீதியரசர் நவாஸின் கட்டளைகளையும் சுட்டிக்காட்டியிருந்தார்.

தொடர்ச்சி P2

# சில நாட்களில் பரீட்சை திகதி



2023 க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கான புதிய திகதிகளை அடுத்த சில நாட்களில் பரீட்சை ஆணையாளர் நாயகம் அறிவிப்பார் என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (03) தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

அரசாங்கம் முன்வைத்துள்ள

# சட்டமூலம் வாபஸ் பெறப்பட வேண்டும்

**ஆசிய இன்டர்நெட் கூட்டமைப்பானது கடுமையான எதிர்ப்பை வெளியிட்டுள்ளது**



அரசாங்கம் சகல பக்கங்களிலிருந்தும் மக்களின் பேச்சுச் சுதந்திரத்தை இல்லாதொழிக்கவும், ஜனநாயகத்தை இல்லாதொழிக்கவும் தயாராகி வருவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

பயங்கரவாத தடுப்புச் சட்டத்தில், அரசுக்கு எதிராக கருத்து தெரிவித்தால்,

தொடர்ச்சி P2

# சட்டமூலத்தை சமர்ப்பித்தவுடன் சவாலுக்குட்படுத்தி மனு தாக்கல்

**இலங்கையில் தடைசெய்யப்பட்ட நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படும் நிகழ்நிலை இடங்களை அடையாளம் காணப்படும்**

நிகழ்நிலை (ஒன்லைன்) காப்பு சட்டமூலத்தை சவாலுககு உட்படுத்தி உயர்நீதிமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (03) மனு தாக்கல் செய்யப்பட்டது.

குறித்த சட்டமூலம் செவ்வாய் (03) காலை பொது பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ்ஸினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் சமூக ஆர்வலர் ஒருவரினால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2



# பௌத்த பேரினவாதிகளால் நீதித்துறை செயலிழந்துள்ளது

**நாட்டில் இருக்கின்ற பேரினவாத செயற்பாட்டாளர்களுக்கு இந்த அரசாங்கம் ஒரு தகுந்த நடவடிக்கையை எடுக்கவில்லை**

நாட்டில் உள்ள பௌத்த பேரினவாதிகளால் நீதித்துறை செயலிழந்து இருப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ். சிறீதரன், பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (03) தெரிவித்தார்.

கட்டுமானப் பணியை நிறுத்துமாறு நீதிபதி உத்தரவிட்டபோதும் பேரினவாத எண்ணங்களோடு சென்ற பிக்குமார்களும் எம்.பிக்களும் அந்த விகாரைகளை கட்டி முடித்திருக்கிறார்கள் என்று சுட்டிக்காட்டினார்.

தொடர்ச்சி P2



PAGE 1 தொடர்ச்சிகள்

# சர்வதேச விசாரணை இல்லை; முற்றுப்புள்ளி

நேர்காண்பவர் 'முட்டாள்தனமாகப் பேசுகிறார்' என்று ஜனாதிபதி குற்றம் சாட்டியதுடன், போர் தொடர்பாகக் கூட சர்வதேச கண்காணிப்பாளர்களின் தேவையை இலங்கை எதிர்பார்க்கவில்லை என்றார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் தாம் கர்தினால் மல்கம் ரஞ்சித்தை தொடர்பு கொள்ளவில்லை என்றும் கத்தோலிக்க ஆயர்கள் மாத்திரமே தொடர்பு கொண்டதாகவும் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

சர்வதேச விசாரணையை முன்னெடுப்பதில் இலங்கைக்கு எவ்வித பிரச்சினையும் இல்லை. ஆனால் சர்வதேச விசாரணை வட்டத்தில் எங்களை மட்டும் குறி வைப்பது ஏன்? என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கேள்வியெழுப்பியுள்ளார்.

சர்வதேச ஊடகம் ஒன்றின் நிகழ்ச்சியில் கலந்துகொண்ட அவரிடம், இலங்கையின் அரசியல் விவகாரங்கள் தொடர்பில் சர்வதேச விசாரணையை முன்னெடுப்பது குறித்து கேள்வி எழுப்பப்பட்டுள்ளது. "சர்வதேச விசாரணையை முன்னெடுப்பதில் இலங்கைக்கு எந்த பிரச்சினையும் இல்லை, ஆனால் சர்வதேச விசாரணை வட்டத்தில் எங்களை மட்டும் குறி வைப்பது ஏன்? என்றும் வினவினார்.

கேள்வி கேட்க அழைத்துவிட்டு, எங்களைச் சிறுமைப்படுத்துவது மேற்கத்திய நாடுகளின் மனநிலையை வெளிப்படுத்துகிறது என்றும் தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் தாங்கள் அமைத்துள்ள விசாரணைக்குழுவில் மக்கள் நம்பிக்கை கொள்ளவில்லை என ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு,

"மக்களுக்கு அதைப்பற்றி நாம் தெரிவிப்போம் நீர் யார் அதைக் கேட்பதற்கு?" என கடும் தொனியில் பதிலளித்துள்ளார்.

# பேக்கரி பொருட்களின் விலைகளும் உயரும்

தற்போது மீண்டும் மின் கட்டணத்தை உயர்த்துவது குறித்து ஆராயப்பட்டு வருகின்ற நிலையிலேயே சிறு மற்றும் நடுத்தர அளவிலான வெதுப்பக உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கமல் பெரேரா மேற்குறிப்பிட்ட விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த மாதம் முதல் மின் கட்டணத்தைத் திருத்தியமைக்குமாறு இலங்கை மின்சார சபை, பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

எரிபொருள் விலையேற்றத்தினால் தமது தொழிற்துறைக்கு பாரிய பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்றும் இவ்வாறான சூழலில், மீண்டும் மின்கட்டணம் உயர்த்தப்படுமானால் பேக்கரி உற்பத்தி பொருட்களின் விலைகளை அதிகரிக்க வேண்டியேற்படும் என சங்கத்தின் தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

# பௌத்த பேரினவாதிகளால் நீதித்துறை செயலிழந்துள்ளது

இதன் மூலமாக இலங்கையினுடைய நீதித்துறை செயலிழந்து இருப்பது தெரியவருகிறது என்றும் இந்த நாட்டில் இருக்கின்ற பேரினவாத செயற்பாட்டாளர்களுக்கு இந்த அரசாங்கம் ஒரு தகுந்த நடவடிக்கையை எடுக்கவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# சாதாரண பிரஜையொருவர் பேசியிருந்தால் கடூழியசிறை

இதன்போது எழுந்து உரையாற்றிய நீதியமைச்சர், சுமந்திரன் எம்.பி சிறப்புரிமை ஊடாக கடந்த 2020ஆம் ஆண்டு ஒக்டோபரில் நீதிமன்றத்தை மலினப்படுத்தினார் என்றும் இவரை போன்று எவரும் நீதிமன்றத்தை கடுமையாக விமர்சிக்கவில்லை என்றும் தெரிவித்ததுடன், சுமந்திரனைப் போல வேறொருவர் விமர்சித்திருந்தால் இன்று அந்த நபர் கடூழிய சிறைதண்டனைக்கு உள்ளாக்கப்பட்டிருப்பார் என்றார்.

இதன்போது எழுந்த சுமந்திரன் எம்.பி, தான் குறிப்பிட்ட விடயத்துக்கு பொருத்தமற்ற வகையில் நீதியமைச்சர் உரையாற்றுகிறார் என்றும் முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதியின் பதவி விலகல் தொடர்பில் நீதியமைச்சர் முறையாக பதிலளிக்கவில்லை என்றும் குறிப்பிட்டார்.

# சில நாட்களில் பரீட்சை திகதி

பரீட்சைக்கான பாடத்திட்டத்தை சரியான நேரத்தில் உள்ளடக்குவதற்கு போதிய நேரம் இல்லை என்று மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் புகார்கள் காரணமாக பரீட்சையை ஒத்திவைக்குமாறு அரசாங்க மற்றும் எதிர்க்கட்சியின் பல எம்.பி.க்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பரீட்சையை மீளத் திட்டமிடுவது குறித்த தீர்மானம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினுடையது எனத் தெரிவித்த அமைச்சர், பல்வேறு தரப்பினரால் வெளிப்படுத்தப்பட்ட கரிசனைகளை ஆணையாளர் நாயகம் கவனத்தில் எடுத்துள்ளதாகத் தெரிவித்தார்.

# ரூ. 4 கோடி பெறுமதியான 35 கிலோ கிராம் ஹஷீஸ்

நிலையத்தில் கைப்பற்றப்பட்டுள்ளதாக சுங்க ஊடகப் பேச்சாளர் சிவலி அருக்கொட தெரிவிதுள்ளார்.

ஐந்து பொதிகளாக பொதியிடப்பட்டு, இத்தாலியில் இருந்து கட்டுநாயக்க விமான சரக்கு முனையத்துக்கு விமான அஞ்சல் மூலம் இந்த போதைப்பொருள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

**கட்டுநாயக்க விமான சரக்கு முனையத்துக்கு விமான அஞ்சல் மூலம் இந்த போதைப்பொருள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அலைபேசி எண்கள் மட்டுமே உள்ளன**

இந்த சந்தேகத்திற்கிடமான பொதிகள் ஒருகொடவத்தை சுங்க வருவாய் கண்காணிப்பு பிரிவின் ஆய்வு கூடத்திற்கு கொண்டு செல்லப்பட்டு சோதனை செய்யப்பட்டன.

இந்த பொதிகள், விமான சரக்குகளை வீட்டிற்கு கொண்டு செல்லும் முகவர் நிலையத்தால் பெறப்பட்டது. இந்தப் பொதிகளை கொண்டுச்சேர்க்கவேண்டிய முகவரிகள் எதுவும் இல்லை மற்றும் பொதிகளின் உரிமையாளர்களின் அலைபேசி எண்கள் மட்டுமே உள்ளன.

ஹஷீஸ் போதைப்பொருளை கைப்பற்றிய சுங்க வருவாய் கண்காணிப்பு திணைக்கள அதிகாரிகள் மேலதிக விசாரணைகளுக்காக அந்த போதைப்பொருளை பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவினரிடம் ஒப்படைத்துள்ளனர்.

# சட்டமூலத்தை சமர்ப்பித்தவுடன் சவாலுக்குட்படுத்தி மனு தாக்கல்

சட்டமூலத்தின் சில விதிகள் அரசியலமைப்புடன் ஒத்துப்போகவில்லை என்று தனது மனுவில் சுட்டிக்காட்டிய மனுதாரர், பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன், பொது வாக்கெடுப்பில் நிறைவேற்றப்பட்டால் மட்டுமே, சட்டமூலம் சட்டமாக மாறும் என்று கோரியுள்ளார்.

ஜனாதிபதியினால் நியமிக்கப்படும் ஆணைக்குழுவின் ஊடாக சமூக வலைத்தளங்கள் உள்ளிட்ட அனைத்து நிகழ்நிலை செயற்பாடுகளையும் கட்டுப்படுத்துவது தொடர்பான விதிமுறைகளை அமுல்படுத்த இந்த சட்டமூலத்தினூடாக எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

இலங்கையில் சில உண்மை அறிக்கைகளை இணையத்தில் தொடர்புகொள்வதை தடைசெய்வதற்கான ஏற்பாடுகளை செய்வதற்காக ஆணைக்குழுவை நிறுவுவதற்கான முயற்சியில் சட்டமூலம் சமர்ப்பிக்கப்பட்டது.

**தடைசெய்யப்பட்ட நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படும் நிகழ்நிலை இடங்களை அடையாளம் கண்டு அறிவிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யவும் குறித்த சட்டமூலம் சமர்ப்பிக்கப்பட்டது.**

தடைசெய்யப்பட்ட நோக்கங்களுக்காக நிகழ்நிலை கணக்குகள் மற்றும் உண்மையற்ற நிகழ்நிலை கணக்குகளைப் பயன்படுத்துவதைத் தடுக்கவும் இலங்கையில் தடைசெய்யப்பட்ட நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படும் நிகழ்நிலை இடங்களை அடையாளம் கண்டு அறிவிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யவும் குறித்த சட்டமூலம் சமர்ப்பிக்கப்பட்டது.

நிகழ்நிலை பாதுகாப்பு தொடர்பான உண்மை மற்றும் ஏனைய தொடர்புடைய விடயங்களின் தவறான அறிக்கைகளின் தகவல் தொடர்புக்கான நிதி மற்றும் பிற ஆதரவை முடக்கும் நோக்கிலும் குறித்த சட்டமூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சட்டமூலம் வாபஸ் பெறப்பட வேண்டும்

சிறையில் அடைக்க வாய்ப்பு உள்ளதாகவும், நிகழ் நிலை காப்பு சட்டத்தின் ஊடாக இவ்வாறான தண்டனைகளை விதிக்கவும் வாய்ப்பு உள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர், பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (03) சுட்டிக்காட்டினார்.

அப்பிள், அமேசான், கூகுள், மொட்டா, எக்ஸ், புக்கிங்.காம் போன்றவற்றை உள்ளடக்கிய ஆசிய இன்டர்நெட் கூட்டமைப்பு கடுமையான எதிர்ப்பை வெளியிட்டுள்ளதாகவும், இவர்கள் நாட்டை விட்டு வெளியேறினால் வெளிநாட்டு முதலீடுகள் வீழ்ச்சியடையும் என்றும் குறிப்பிட்டார்.

**அரசாங்கத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும், ஜனாதிபதியின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் எடுக்கும் முயற்சியே இதுவாகும் என்றும், இது சர்வாதிகாரமான தவறானதோர் திட்டமாகும்**

நிகழ் நிலை காப்பு சட்டமூலத்தை கொண்டு வந்து இன்று என்ன நடந்துள்ளது என்று சிந்தித்து பார்க்குமாறும், ஆசிய இன்டர்நெட் கூட்டமைப்பானது கடுமையான எதிர்ப்பை வெளியிட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

இவற்றை விரட்டியடுத்து விட்டால் சர்வதேச முதலீட்டை எவ்வாறு பெற்றுக்கொள்ள முடியும் என்றும், நிகழ் நிலையில் எவ்வித பாதுகாப்பும் இல்லை என்றும் சுட்டிக்காட்டினார்.

அரசாங்கத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும், ஜனாதிபதியின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் எடுக்கும் முயற்சியே இதுவாகும் என்றும், இது சர்வாதிகாரமான தவறானதோர் திட்டமாகும் என்பதனால் இதை வாபஸ் பெற வேண்டும் என்றார்.

# வடக்கு, கிழக்கில் நீதிமன்றங்கள் முடங்கின

பணிப்புறக்கணிப்பு மற்றும் கண்டன ஊர்வலங்கள் முன்னெடுக்கப்பட்டன.

திருகோணமலை, மட்டக்களப்பு, மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் பணிப்புறக்கணிப்பு, ஆர்ப்பாட்டம் மற்றும் கண்டன ஊர்வலங்கள் முன்னெடுக்கப்பட்டன.

மட்டக்களப்பில், "நீதித்துறை சுதந்திரத்துக்காய் குரல் கொடுப்போம், சட்டத்தின் முன் யாவரும் சமம், நீதித்துறையை அச்சுறுத்தாதே, பாரபட்சமற்ற விசாரணை வேண்டும், சுதந்திரத்தில் தலையிடாதே" போன்ற சுலோகங்கள் ஏந்தியவாறு அங்கிருந்து வீதியில் ஆர்ப்பாட்டமாக நீதிமன்ற வீதி சுற்று வட்டத்தைச் சென்று மீண்டும் நீதிமன்ற கட்டடத் தொகுதிக்கு முன்னால் சென்றடைந்து நீதி கோரி சுமார் ஒரு மணித்தியாலம்ஆர்பாட்டத்தில் ஈடுபட்ட பின்னர் ஆர்பாட்டக்காரர்கள் அங்கிருந்து விலகி சென்றனர்.

திருகோணமலையில், நீதித்துறைக்கு ஏற்பட்ட இந்த அச்சுறுத்தலைக் கண்டித்து சட்டத்தரணிகள் பதாதைகளை ஏந்தியவாறு "சட்ட ஆட்சியை நிறுத்து. நீதித்துறையில் தலையிடாதே" போன்ற பதாகைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நீதிபதி சரவணராஜாவுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராகவும் சட்டத்துறையிலும் நீதித்துறையிலும் இடம் பெறும் அத்துமீறல்களை நிறுத்த கோரியும் மன்னார் சட்டத்தரணிகள் பணிப்புறக்கணிப்பு போராட்டம் ஒன்றை மேற்கொண்டனர்.

அதே நேரம் முல்லைத்தீவில் இடம் பெற்று வரும் போராட்டத்திலும் கலந்து கொண்டு நீதிபதிக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிரான முல்லைத்தீவு சட்டத்தரணிகளின் போராட்டத்திற்கு வலு சேர்த்துள்ளனர்.

**யாழ்ப்பாண மாவட்ட சட்டத்தரணிகள் சங்கமும் தொடர்ச்சியாக இரண்டு வாரங்களுக்கு எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு தீர்மானித்துள்ளனர்**

மன்னார் மாவட்ட சட்டத்தரணிகள் எந்த ஒரு நீதிமன்றத்திலும் ஆஜராகவில்லை என்பதுடன் வழக்குகளுக்காக சமூகளித்த பொது மக்களும் பல்வேறு பாதிப்புக்களை எதிர் கொண்டுள்ளனர்.

இதேவேளை, முல்லைத்தீவு சட்டத்தரணிகள் சங்கம் திங்கட்கிழமை (02) ஆரம்பித்த காலவரையறையின்றிய தொடர் நீதிமன்றப் புறக்கணிப்பு நடவடிக்கைகள் செவ்வாய்க்கிழமை (03) இரண்டாவது நாளாக தொடர்ந்தது. நீதித் துறைக்கான சுதந்திரமும், சுயாதீன தன்மைக்களும் உறுதி செய்யப்படும் வரை பணிபுறக்கணிப்பில் ஈடுபடுவோம் என முல்லைத்தீவு மாவட்ட சட்டத்தரணிகள் சங்கம் தீர்மானம் மேற்கொண்டதாக முல்லைத்தீவு மாவட்ட சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் த. பரஞ்சோதி ஊடகங்களுக்குத் தெரிவித்திருந்தார்.

இதேவேளை, யாழ்ப்பாண மாவட்ட சட்டத்தரணிகள் சங்கமும் தொடர்ச்சியாக இரண்டு வாரங்களுக்கு எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு தீர்மானித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# சிறுவர்கள் யாசிப்பதை தடுப்பதற்கு விசேட குழு

பாராளுமன்ற உறுப்பினர்கள், பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கான பொலிஸ் பிரிவு உள்ளிட்ட சம்பந்தப்பட்டவர்களை உள்ளடக்கிய இந்த விசேட குழுவை ஒருங்கிணைப்பதற்கான பணி தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கு வழங்கப்பட்டது.

மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க தலைமையில் அண்மையில் பாராளுமன்றத்தில் நடைபெற்றபோதே இது பற்றிய தீர்மானம் எடுக்கப்பட்டது.

சிறுவர்களையும் பெண்களையும் வியாபார நோக்கத்திற்காக யாசகம் செய்வதற்குப் பயன்படுத்துவது குறித்து இங்கு விரிவாகக் கலந்துரையாடப்பட்டதுடன், சிறுவர்கள் யாசகத்துக்குப் பயன்படுத்தப்படுவது முற்றாகத் தடுக்கப்பட வேண்டும் என இராஜாங்க அமைச்சர் அனுப பஸ்குவல் வலியுறுத்தினார்.

கடந்த செப்டெம்பர் மாதம் 05ஆம் திகதி முதல் 08ஆம் திகதி வரையான காலப்பகுதியில் 41 மாநகரசபைகள் மற்றும் 24 மாநகரசபைகளை உள்ளடக்கிய நகரப் பகுதிகளில் யாசகர்கள் குறித்து கணக்கெடுப்பொன்றை நடத்தியிருப்பதாக சமூக சேவைகள் திணைக்களம் குழுவில் தெரிவித்தது.

இந்தக் கணக்கெடுப்பின் தரவுகள் பதிவுசெய்யப்பட்டு வருவதாகவும், இதுவரை பதிவுசெய்யப்பட்ட தரவுகளுக்கு அமைய கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்ட பகுதிகளில்

**நகரப் பகுதிகளில் யாசகர்கள் குறித்து கணக்கெடுப்பொன்றை நடத்தியிருப்பதாக சமூக சேவைகள் திணைக்களம் குழுவில் தெரிவித்தது.**

3,000 முதல் 4,000 வரையிலான யாசகர்கள் இருப்பதாக அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.

தரவுகள் முழுமையாகப் பதிவுசெய்யப்பட்ட பின்னர் யாசகத்துக்குப் பயன்படுத்தப்படும் பதினெட்டு வயதுக்குக் குறைந்த பிள்ளைகள் பற்றிய தகவல்களை வழங்க முடியும் என அவர்கள் தெரிவித்தனர்.

இந்தக் கணக்கெடுப்பின் முழுமையான தரவுகளையும் குறித்த விசேட குழுவுக்கு வழங்குமாறும் சுட்டிக்காட்டிய இராஜாங்க அமைச்சர்கள், நாடு முழுவதையும் உள்ளடக்கும் வகையில் கணக்கெடுப்பொன்றை நடத்துவதன் அவசியத்தையும் வலியுறுத்தினர்.

தகவல்களை அடிப்படையாகக் கொண்டு சிறுவர்களை யாசகத்துக்குப் பயன்படுத்துவதைத் தடுப்பதற்கான பொறிமுறையொன்றை விரைவில் பரிந்துரைக்குமாறும், அதனை நடைமுறைப்படுத்துவதற்குச் சட்டத்தில் திருத்தங்கள் கொண்டு வரவேண்டியிருந்தால் அதில் தலையிடுவதற்குத் தயாராக இருப்பதாகவும் இங்கு தெரிவிக்கப்பட்டது.

# அழுத்தம் கொடுத்திருந்தால் அவமதிப்பு வழக்கு தொடருக

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (03) தெரிவித்தபோதே நீதியமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

நீதித்துறையைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் அரசாங்கத்துக்கு இல்லை என்றும் வசதிகளை வழங்குதல் மற்றும் சட்டங்களை இயற்றும் வேலையைத் தான் அரசாங்கம் செய்கிறது என்றும் நீதியமைச்சர் சுட்டிக்காட்டினார்.

தனக்கு உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதால் தான் பதவியை இராஜினாமா செய்வதாக நீதிச்சேவைகள் ஆணைக்குழுவிற்கு நீதிபதி சரவணராஜா நாட்டை விட்டு வெளியேறிய பின்னர் அறிவித்ததாக நீதியமைச்சர் தெரிவித்தார்.

அவருக்கு அவ்வாறான அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டால் அவர் நட்டை விட்டுச் சென்ற பின் முறைப்பாடு செய்திருக்கலாகாது என்றும் அரசியலமைப்பின் பிரகாரம்,

**மேன்முறையீட்டு நீதிமன்றம் அல்லது உயர் நீதிமன்றத்திற்கு இது குறித்து தெரியப்படுத்தியிருக்க முடியும்**

தன்னை அச்சுறுத்திய நபருக்கு அழைப்பாணை விடுத்து அவரை மன்றுக்கு முன் ஆஜராக செய்யவும் அல்லது பிடியாணை பிறப்பிக்கும் அதிகாரமும் அவருக்கு உள்ளது என்றும் குறிப்பிட்டார்.

மேலும் குறித்த நபருக்கு எதிராக வழக்குத்தாக்கல் செய்து அவரைத் தண்டிக்கவோ இல்லாவிட்டால் மேன்முறையீட்டு நீதிமன்றம் அல்லது உயர் நீதிமன்றத்திற்கு இது குறித்து தெரியப்படுத்தியிருக்க முடியும் என்றார்.

தனது அதிகாரங்களை அவர் பயன்படுத்தாவிட்டால் அதற்கு அவர் தான் பொறுப்புக்கூற வேண்டும் என்றும் நீதியமைச்சர் கூறினார்.

# கருத்து சுதந்திரத்தை பாதிக்கும் சட்டத்தை தடை செய்ய வேண்டும்

■ பு.கஜிந்தன்

மக்களுடைய கருத்துச் சுதந்திரம் என்பது இலங்கையில் அடிப்படை உரிமையாக அரசியல் அமைப்பிலே உட்புகுத்தப்பட்டிருக்கின்ற ஒரு விடயம். அதைக் கேள்விக்கு உட்படுத்துகின்ற விதமாக புதிய சட்டம் கொண்டுவரப்படுகிறது என தமிழ்த் தேசியக் கூட்டணியின் உறுப்பினரும், முன்னாள் யாழ்ப்பாண மாநகர முதல்வருமான சட்டத்தரணி வி.மணிவண்ணன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் - ஊடக அமையத்தில் செவ்வாய்க்கிழமை (03) காலை நடைபெற்ற ஊடக சந்திப்பிலே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில்,

இந்த காலகட்டத்திலே இரண்டு விதமான சட்டங்களை அரசாங்கம் முன்மொழிந்து அதை நிறைவேற்றுவதற்குத் துடித்துக் கொண்டிருக்கிறது. ஒன்று பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம். ஏற்கனவே இருக்கின்ற பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கிவிட்டு புதிதாகப் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் என்கின்ற பேரிலே புதிய ஒரு சட்டத்தைக் கொண்டு வருகின்ற முனைப்பிலே அரசாங்கம் இருக்கிறது. அதேபோன்று ஆன்லைன் என்று சொல்லப்படுகின்ற நிகழ்நிலைக்காப்பு சட்டமன்ற இன்னுமொரு சட்டத்தையும் கொண்டுவர அரசாங்கம் புரிகிறது.

அரசாங்கத்தின் மீது இருக்கக்கூடிய விமர்சனங்களைப் பொதுமக்கள் முன்வைக்க விடாமல் தடுக்கின்ற ஒரு மோசமான ஒரு சட்ட ஏற்பாடாகத் தான் நிகழ்நிலை காப்பு சட்டம் இருக்கிறது. இது மக்களுடைய கருத்துச் சுதந்திரத்தை அப்பட்டமாக விழுங்குகிறது என தெரிவித்துள்ளார்.



# பிராந்திய சுனாமி ஒத்திகைக்கான பயிற்சி

திருகோணமலை, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களில் கரையோர மக்களினதும் பாடசாலை மாணவர்களினதும் தயார்நிலையைப் பரிசோதிப்பதற்காக பிராந்திய சுனாமி ஒத்திகை பயிற்சியொன்று நாளை புதன்கிழமை (04) இடம்பெறவுள்ளதாக பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ பாராளுமன்றத்தில் நேற்று (03) தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தினால் இலங்கையினுள் தாபிக்கப்பட்டுள்ள தேசிய மட்டத்திலிருந்து கிராமிய மட்டம் வரையான சுனாமி ஆரம்ப ஆபத்து நிலையை எதிர்வு கூறும் பொறிமுறையை மதிப்பீடு செய்யும் நோக்கத்தில் இந்தப் பயிற்சி இடம்பெறுவதாக பிரதி சபாநாயகர் குறிப்பிட்டுள்ளார்.

கரையோர மாவட்டங்களை பிரதிநிதித்துவம் செய்கின்ற பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அறிவிக்குமாறு அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தினால் கோரிக்கையொன்று விடுக்கப்பட்டுள்ளதாகவும் பிரதி சபாநாயகர் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் சபாநாயகர் அறிவிப்பின் போதே, மேற்கண்டவாறு அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# ரயிலில் மோதுண்டு இளைஞன் பலி

■ வா.கிருஸ்ணா, ரீ.எல் . ஜவ்பர்கான்

மட்டக்களப்பில் இருந்து பொலன்னறுவை நோக்கிச் சென்ற புகையிரதத்தில் மோதுண்டு 38 வயது இளைஞர் பரிதாபமான முறையில் உயிரிழந்த சம்பவம் ஒன்று செவ்வாய்க்கிழமை (3) மதியம் ஏறாவூரில் இடம்பெற்றுள்ளது

முச்சக்கரவண்டியை செலுத்திவந்த நபர், பாதுகாப்பற்ற புகையிரத கடவையைக் கடக்க முற்பட்ட போதே ரயிலில் மோதி விபத்துக்கு உள்ளானார். முச்சக்கர வண்டி முற்றாக சேதமடைந்துள்ளது. நபரும் ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பாக ஏறாவூர் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# தாயின் அனுமதியுடன் மகள் வன்புணர்வு

தாயின் அனுமதியுடன் 13 வயதான சிறுமியை பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தி கர்ப்பிணியாக்கிய குற்றச்சாட்டின் பேரில் இளைஞன் கைது செய்யப்பட்டு, நேற்று செவ்வாய்க்கிழமை (03) வரையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

மெல்சிறிபுர பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு குருநாகல் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டபோதே நீதவான் இந்த தீர்ப்பை ஒக்டோபர் 1ஆம் திகதி உத்தரவிட்டுள்ளார்.

வறக்காபொல பிரதேசத்தில் தற்காலிகமாக வசித்துவரும் 32 வயதான இளைஞனே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். இவர், திருமணமானவர்.

கனரக வாகனத்தை செலுத்தும் தந்தைக்கு உதவியாளராக பணியாற்றிய நபரே இவ்வாறு பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தி சிறுமியை கர்ப்பிணியாக்கியுள்ளார்.

தந்தையுடன் பணியாற்றும் நபர், தந்தையுடன் வீட்டுக்கு அடிக்கடி வந்துள்ளார். அவ்வாறு வரும்போது அந்த நபருக்கும், சாரதியின் மனைவிக்கும் இடையில் கூடாத உறவு ஏற்பட்டுள்ளது. அவ்வப்போது வீட்டுக்கு வரும் அந்த நபர், வீட்டிலும் தங்கியிருந்துள்ளார்.

அப்போது, தாயின் அனுமதியுடன், அவரது மகளை பல தடவைகள் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தியுள்ளார். இதனால் அந்த சிறுமி கர்ப்பமடைந்துள்ளார்.

பாதிக்கப்பட்ட சிறுமி தனக்கு நேர்ந்ததை தந்தையிடம் தெரிவித்துள்ளார். அதன்பின்னர் செய்யப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் அந்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய போது, அவரை பிணையில் எடுப்பதற்கு அந்த சிறுமியின் தாய், முன்வந்திருந்தமை விசேட அம்சமாகும்.

ஐந்து மாத கர்ப்பிணியான சிறுமி, கலிகமுவ சிறுவர் நன்னடத்தை நிலையத்தில் அனுமதிக்கப்பட்டார். திடீரென நோய்வாய்ப்பட்டமையால் அச்சிறுமி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இந்த பாலியல் வன்புணர்வு சம்பவம் இடம்பெற்றதை தன்னுடைய சகோதரனும் சகோதரியும் கண்டுள்ளனர் என்றும் பாதிக்கப்பட்ட சிறுமி தெரிவித்துள்ளார்.

தன்னை வன்புணர்வுக்கு உட்படுத்துவதை தடுத்து நிறுத்துமாறு தனது தாயிடம் பல முறை கோரிக்கை விடுத்திருந்த போதிலும், அதற்கு தாய் செவிசாய்க்கவில்லை என்றும் அச்சிறுமி தெரிவித்துள்ளார்.



# 98,000 வீடுகளின் நிர்மாணப் பணிகள் விரைவில் நிறைவடையும்

நாட்டின் பல்வேறு அரசாங்கங்களினால் ஆரம்பிக்கப்பட்டு நிறுத்தப்பட்டுள்ள 98,000 வீடுகளின் நிர்மாணப் பணிகள் விரைவில் நிறைவடையும் என்றும் அதற்காக 24,000 மில்லியன் ரூபாய் தேவைப்படும் என்றும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் ரஜீவ் சூரியஆரச்சி தெரிவித்துள்ளார்.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவின் பணிப்புரைக்கு அமைவாக நிர்மாணப் பணிகள் ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

உலக குடியிருப்பு தினத்தை முன்னிட்டு நிட்டம்புவ ரன்பொகுனுகம வீட்டுத்திட்டத்தின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வகையில் செவ்வாய்க்கிழமை (03) இடம்பெற்ற நடமாடும் சேவையில் கலந்துகொண்டு கருத்துரைத்தபோதே தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மேலும், “தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான நிட்டம்புவ ரன்பொகுனுகம வீடமைப்புத் திட்டம் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக உலக குடியிருப்பு தினத்துடன் இணைந்து இ நடமாடும் சேவையை முன்னெடுத்து வருகின்றோம். இந்த வீடமைப்புத் திட்டத்தில் வாழும் மக்கள் தாங்கள் எதிர்நோக்கும் பல பிரச்சினைகளை எம்மிடம் முன்வைத்தனர்.

இந்த வருடம் அரச திறைசேரியிலிருந்து 3,750 மில்லியன் ரூபாய் எமது நிறுவனத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. அவற்றில் சுமார் 2,000 மில்லியன் ஏற்கெனவே பெறப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் நாங்கள் ஜனாதிபதியுடன் பேசுவோம் என நம்புகிறோம். அதன்பிறகு 3,750 மில்லியன் ரூபாய்கள் அனைத்தும் கிடைக்கும் என நம்புகிறோம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.



# 8 மணி நேரம் மாத்திரமே வைத்தியசாலை இயங்கும்

■ செ.தி.பெருமாள்

வட்டவளை மாவட்ட வைத்தியசாலையில் ஒரு வைத்தியர் மாத்திரம் பணியில் இருக்கின்றமையினால், தொடர்ச்சியாக வைத்தியாசலையில் இயக்க முடியாது எனவும், உயர் அதிகாரிகளின் அறிவுறுத்தலுக்கு அமைவாக வைத்தியர்கள் பற்றாக்குறை நிவர்த்தி செய்யும் வரை காலை 8 மணிமுதல் மாலை 4 மணிவரை மாத்திரமே வைத்தியசாலை இயங்குமெனவும் அறிவித்தலை உள்ளடக்கிய சுவரொட்டி ஒன்றை வட்டவளை மாவட்ட வைத்தியசாலையின் முன்றலில் காட்சிபடுத்தப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

இது குறித்து சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகள் உடனடியாக கவனம் செலுத்தி இந்த வைத்தியசாலை 24 மணி நேரமும் இயங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.


# இளம் பூசகர் தன்னுயிரை மாய்த்தார்

■ ரஞ்சித் ராஜபக்ஷ

16 வயதான இளம் பூசகர், தன்னுயிரை மாய்த்துக்கொண்ட சம்பவமொன்று நோட்டன்பிரிஜ் பொலிஸ் பிரிவில் செவ்வாய்க்கிழமை (03) இடம்பெற்றுள்ளது.

நோட்டன்பிரிஜ் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஒஸ்போன் தோட்டத்தில் இந்துக்கோவிலில் பூசகருக்கு உதவியாளராக செயற்பட்டு வந்த சுந்தரமுல்லன் ஜனநாதன் என்ற பூசகரே இவ்வாறு மரணித்துள்ளார்.

கோவிலில் அமைக்கப்பட்டிருந்த தற்காலிக மடுவத்திலேயே அவரது சடலம் கிடைக்பெற்றதாக நோட்டன் பிரிஜ் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



பிரதான பூசகர் கோவிலில் இல்லாத சமயத்திலேயே அவர் தன்னுயிரை மாய்த்துக்கொண்டுள்ளார் என்று தெரிவித்துள்ள நோட்டன்பிரிஜ் பொலிஸார், சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்துள்ளனர்.

# சீரற்ற காலநிலையால் 25 ஆயிரம் பேர் பாதிப்பு

நாட்டில் கடந்த சில நாட்களாக நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக 10 மாவட்டங்களில் 6,250 குடும்பங்களைச் சேர்ந்த 25 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

கடும் மழை மற்றும் பலத்த காற்று மற்றும் மண்சரிவு காரணமாக, 458 வீடுகள் சேதமடைந்துள்ளதாக நிலையத்தின் அண்மைய அறிக்கைகள் காட்டுகின்றன.

கடும் மழையால் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக 18,800க்கும் மேற்பட்டவர் நபர்கள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், கம்பஹா மிகவும் மோசமாக பாதிக்கப்பட்ட பிரதேசமாக காணப்படுகிறது.

இதேவேளை, நாட்டின் தென்மேற்குப் பகுதியில் செவ்வாய்க்கிழமை (03) முதல் அடுத்த சில நாட்களுக்கு மழையுடனான காலநிலை அதிகரிக்கும் என்றும் மேல், சப்ரகமுவ, தென் மற்றும் வடமேல் மாகாணங்களிலும் கண்டி, நுவரெலியா மாவட்டங்களிலும் அவ்வப்போது மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் எனவும் எதிர்வு கூறப்பட்டுள்ளது.

மேற்கு, சப்ரகமுவ மற்றும் தென் மாகாணங்களில் சில இடங்களில் 75 மில்லிமீற்றருக்கும் அதிகமான கடும் மழை பெய்யலாம் என்றும் ஏனைய இடங்களில், குறிப்பாக கிழக்கு, ஊவா மாகாணங்களில் மாலை அல்லது இரவு வேளைகளில் மழை அல்லது இடியுடன் கூடிய மழையை எதிர்பார்க்கலாம் என்றும் கூறப்படுகின்றது.

## வாகன அனுமதிப் பத்திரங்களை

# ஒக்டோபர் 7ஆம் முதல் வீட்டிலிருந்தே பெறலாம்

அனைத்து வாகன வருமான வரி அனுமதிப்பத்திரங்களை விநியோகிக்கும் புதிய கட்டமைப்பு (eRL 2.0) அறிமுகப்படுத்தல், இம்மாதம் 07ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் இந்தப் பொறிமுறையின் ஊடாக வீட்டிலிருந்தவாறே மக்களுக்கு வாகன வருமான வரி அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளும் வசதிகள் கிடைக்கும் என்றும் தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் தெரிவித்துள்ளார்.

மேல் மாகாணம் தவிர்ந்த ஏனைய அனைத்து மாகாணங்களிலும் இந்த வேலைத்திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளதாகவும் ஜனாதிபதி ஊடக மையத்தில் திங்கட்கிழமை (02) நடைபெற்ற ஊடக சந்திப்பில் அமைச்சர் கூறியுள்ளார்.

மேலும் கருத்துத் தெரிவித்த அவர், “இந்நாட்டில் அரச சேவையின் வினைத்திறனை மேம்படுத்தவும் முறைகேடுகளைகத் தடுக்கவும் அரச சேவை முழுமையாக டிஜிட்டல் மயமாக்கப்பட வேண்டும்.

எனவே, இது தொடர்பில் அவதானம்




செலுத்திய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, 2023ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட அறிக்கையின்போது அனைத்து அரச நிறுவனங்களும் டிஜிட்டல் மயமாக்கப்பட வேண்டுமெனக் குறிப்பிட்டுள்ளார்.

பிரதேச செயலகங்கள், பிரதேச சபைகள், மாநகர சபைகள், மாவட்டச் செயலகங்கள் உள்ளிட்ட ஒன்பது வகையான அரச நிறுவனங்களைத் தெரிவுசெய்து, அரச சேவையை டிஜிட்டல் மயமாக்கும் வகையில் ஒன்பது முன்னோடி வேலைத் திட்டங்கள் தற்போது நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

மேலும், எதிர்வரும் 07ஆம் திகதி முதல் ஒன்லைன் முறையில் (eRL 2.0) வாகன வருமான வரி அனுமதிப்பத்திரம் பெறும் வசதிகள் ஏற்படுத்தப்படவுள்ளதாகம் தெரிவித்துள்ளார்.

# மரம் முறிந்து விழுந்ததால் போக்குவரத்து தடை

■ எம்.றொசாந்த்

யாழ்ப்பாணம்- சாவகச்சேரி நகர் பகுதியில், மரம் முறிந்து விழுந்தமையால், யாழ்ப்பாணம் - கண்டி நெடுஞ்சாலை ஊடான போக்குவரத்து சுமார் 30 நிமிடங்கள் தடைப்பட்டு இருந்ததுடன், நகருக்கான மின்சாரமும் தடைப்பட்டுள்ளது.

சாவகச்சேரி நகர் பகுதியில் நின்ற சுமார் 200 வருட காலத்திற்கு மேற்பட்ட வேப்ப மரம் ஒன்று செவ்வாய்க்கிழமை (03) காலை முறிந்து வீதிக்கு குறுக்கே விழுந்துள்ளது.

அதனால் யாழ்ப்பாணம் - கண்டி நெடுஞ்சாலை ஊடான போக்குவரத்து தடைப்பட்டுள்ளது. மேலும், மின்சார வயர்கள் மீதும் மரக் கிளைகள் விழுந்தமையால், மின்சார கம்பங்கள் முறிவடைந்ததுடன், நகர் பகுதிக்கான மின்சாரமும் துண்டிக்கப்பட்டுள்ளது.

விழுந்த மரத்திற்கு, கீழ் இருந்த அதிர்ஷ்ட இலாப சீட்டிழுப்பு டிக்கெட் விற்கும் கடை ஒன்றும், மோட்டார் சைக்கிள் ஒன்றும் சேதமடைந்துள்ளது.

சாவகச்சேரி நகர சபை, இலங்கை மின்சார சபையினர், நகர் பகுதி வர்த்தகர்கள், பொதுமக்கள் ஆகியோர் இணைந்து முறிந்து விழுந்த மரத்தை அப்புறப்படுத்தியதுடன், வீதி ஊடான போக்குவரத்தைச் சீர் செய்துள்ளனர்.



# ஐ.எம்.எப் நிபந்தனைகளும் குரல்வளை நெரிப்பும்

நாட்டில் ஏற்பட்டிருந்த பொருளாதார நெருக்கடியின் போது, இருந்த வரிசைகள் இல்லை, பொருட்களுக்கான தட்டுப்பாடுகள் நிலவவில்லை. தங்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் சமையல் எரிவாயு உள்ளிட்டவற்றை கோரி போராட்டத்தில் மக்கள் ஈடுபடவில்லை, எனினும், பொருட்களின் விலைகள் வாராந்தம் அதிகரித்துக்கொண்டே செல்கின்றது.

இந்த அரசாங்கத்தால் பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டதை விட, பொருட்களின் விலைகள் அதிகரிக்கப்பட்ட சந்தர்ப்பங்களே அதிகமாகும், ஒரு பொருளின் விலையை அவ்வப்போது குறைத்து 500 ரூபாய் குறைக்கப்பட்டிருந்தால், அதேபொருளின் விலையை அவ்வப்போது அதிகரித்து 1,000 ரூபாய்க்கு மேல் கொண்டுச் சென்றுள்ளது.

விலை அதிகரிப்பு சமாந்தரமாக ஏனைய பொருட்களின் விலைகளும், சேவைகளின் கட்டணங்களும் அதிகரித்துள்ளன. எனினும், சம்பள அதிகரிப்போ, கொடுப்பனவுகளோ வழங்கப்படவில்லை. இதனால், சாதாரண மக்களின் நிலைமை தாச்சியில் இருந்து அடுப்பில் விழுந்த கதையாகவே இருக்கின்றது.

அவற்றுடன் நிற்காமல், இன்னுமின்னும் அதிகரிப்புகளுக்கான சந்தரப்; பங்களே காணப்படுகின்றன. இவையெல்லாம் அரசாங்கத்தின் அறிவிப்புகளில் இருந்து நன்கு புலனாகின்றது. சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாவது தவணை கடனை பெற்றுக்கொள்ளும் வகையிலேயே, பொருட்களின், விலைகள் அதிகரித்துள்ளன.

சாதாரணமாக, எரிபொருட்களின் விலைகள் அதிகரிக்கப்படுமாயின் சகல பொருட்களின் விலைகளும் அதிகரிக்கும், அவற்றுக்கெல்லாம், எரிபொருட்களின் விலை அதிகரிப்பையே பெரும்பாலான முதலாளிமார் காரணம் காட்டுவர். சில சந்தர்ப்பங்களில், முதலாளிமார் கூறும் காரணங்கள் பொருத்தமற்றதாகவே இருக்கும்.

எரிபொருட்களின் விலை அதிகரிப்பை அடுத்து தனியார் பஸ் கட்டணங்களை அதிகரிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. பாடசாலை வாகனங்களின் கட்டணங்களை திருத்துமாறு கோரியுள்ளனர். எனினும், முச்சக்கரவண்டிகளின் கட்டணத்தில் எவ்விதமான மாற்றங்களையும் செய்யமாட்டோமென அச் சங்கம் அறிவித்துள்ளது.

சிறிய தூரத்தைக்கூட நடந்துச்செல்லாதவர்கள், அதனைபோல இரண்டொரு மடங்கு நீண்ட தூரத்தை நடந்தே செல்கின்றனர். இதனால் முச்சக்கரவண்டிகளுக்கு கிடைக்கும் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை குறைந்துவருகின்றது. பலரும் பொதுப்போக்குவரத்தை நாடிவிட்டனர். இதுவும் நாளாந்தம் முச்சக்கரவண்டி ஓட்டுபவர்களுக்கு பெரும் தலையிடியாகவே உள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தினால் விதிக்கப்பட்டிருக்கும் நிபந்தனைகளை நிறைவேற்றினால் மட்டுமே அடுத்தத தவணை கடனை பெற்றுக்கொள்ள முடியும். அதற்காக இருக்கின்ற முதல் தெரிவும், கடைசி தெரிவும் சாதாரண மக்களாகவே உள்ளனர். அவர்களின் மடியில் கையை வைப்பதன் ஊடாகவே சர்வதேச நாணய நிதியத்தை ஓரளவுக்கு திருப்திப்படுத்த முடியும்.

அந்த நிபந்தனைகளை நிறைவேற்றினால், சாதாரண மக்கள் பெரும் துன்பத்துக்கு உள்ளாவார்கள். எனினும், விலை அதிகரிப்புகளிலேயே அரசாங்கம் குறியாக இருக்கின்றது. அடுத்ததாக மின்கட்டணம் மற்றும் எரிபொருள் கட்டணங்களில் கையை வைத்து உயர்த்திவிட்டால், சாதாரண மக்களுக்கு தலைநிமிரவே முடியாது என்பது மட்டுமே உண்மையாகும்.


தமிழ்Mirror க்கு www.tamilmirror.lk
எழுதுங்கள்


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




# செல்வந்தர்கள் செய்த குற்றத்திற்காக தண்டிக்கப்படும் ஏழைகள்



ஏம்.எஸ்.எம். ஐயூப்

தற்போது நட்டில் நிலவும் பொருளாதார நிலைக்கு இந்நாட்டு சாதாரண மக்கள் பொறுப்பாளர்கள் அல்லர். பொருளாதாரத்தை சீரழிப்பதில் அவர்கள் பங்களித்து இருந்தால் அது ஆட்சியாளர்களின் பங்களிப்பில் ஆயிரத்தில் ஒரு பங்காகத் தான் இருக்க வேண்டும்.

சர்வதேச நாணய நிதியத்தின் தூதுக்குழு ஒன்று இலங்கைக்கு கடந்த வாரம் விஜயம் செய்ததையடுத்து, அரசாங்கம் எடுக்கப்போகும் நடவடிக்கைகளும் அதனையே எடுத்துக் காட்டுகிறது.

சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத்திட்டமே தற்போதைய நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டெடுக்க உள்ள ஒரே வழி என பொதுவாக கருதப்படுகிறது. அவ்வேலைத்திட்டத்தின் மூலம் பொருளாதாரத்தை எவ்வாறு மீட்டெடுக்கலாம் என்பதை நன்குணர்ந்தே அரசாங்கமோ ஏனையவர்களோ அதனை ஏற்றுக் கொண்டுள்ளார்கள் என்று கூற முடியாது. உண்மையைக் கூறுவதாக இருந்தால், வேறு வழியின்றியே எல்லோரும் நாணய நிதியத்தின் வேலைத் திட்டத்தில் தொற்றிக்கொண்டு இருக்கிறார்கள்.

இத்திட்டத்தை முன்னெடுத்துச் செல்வதாக இருந்தால் இலங்கை தாம் வெளிநாடுகளிடமிருந்து பெற்ற கடன்களை மறுசீரமைக்க அந்நாடுகளை இணங்கச் செய்ய வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே நாணய நிதியம் ஆரம்பத்திலிருந்தே இருந்து வந்துள்ளது.

பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டெடுக்க அரசாங்கத்தினதும் நாணய நிதியத்தினதும் அதிகாரிகள் சுமார் ஐந்து மாதங்கள் பேச்சுவார்த்தை நடத்தி கடந்த வருடம் செப்டெம்பர் 1ஆம் திகதி உடன்பாடொன்றை செய்து கொண்டனர். ஆளணி மட்டத்திலான உடன்பாடு என்று அது அழைக்கப்படுகிறது. இலங்கை அரசாங்கம் கடன் மறுசீரமைப்புக்கு கடன் வழங்கிய நாடுகளை இணங்கச் செய்தால் மட்டுமே இந்த ஆளணி மட்டத்திலான உடன்பாட்டை நாணய நிதியத்தின் நிறைவேற்றுச் சபை அங்கீகரிக்கும் என்று அந்த உடன்பாடு செய்து கொண்டபோதே அந்நிதியத்தின் அதிகாரிகள் கூறியிருந்தனர்.

இலங்கை அரசாங்கம் உள்நாட்டில் வங்கிகளிடமிருந்தும் ஊழியர் சேமலாப நிதியம் போன்ற நிதியங்களிடமிருந்தும் பெற்ற கடன்களை மறுசீரமைக்க வேண்டும் என்று நாணய நிதியம் ஒருபோதும் கூறவில்லை. ஆயினும் நாம் உங்களுக்கு வழங்கிய கடன்களை மறுசீரமைக்க வேண்டும் என்றால் நீங்கள் உங்கள் நாட்டில் பல்வேறு நிறுவனங்களிடமிருந்து பெற்ற கடன்களையும் மறுசீரமைக்க வேண்டும என்று கடன் வழங்கிய சில நாடுகள் கூறின. கடன் மறுசீரமைப்பு என்றால் வழங்கிய கடனில் ஒரு பகுதியை கழித்துவிடுதல் அல்லது கடனை திருப்பிச் செலுத்தும் காலத்தை நீடித்தல் அல்லது இரண்டுமாகும்.

உள்நாட்டு கடன் மறுசீரமைப்பானது வெளிநாட்டு கடன் மறுசீரமைப்பிலிருந்து வேறுபட்டதாகும். வெளிநாட்டு கடன்களைப் பொறுத்தவரை, கொடுத்த கடனில் அல்லது அதற்கான வட்டியிலிருந்து ஒரு பகுதியை கழித்து விடுவதா அவ்வாறாயின் அது எவ்வளவு கடனை திருப்பிச் செலுத்தும் காலத்தை நீடிப்பதா அவ்வாறாயின் எவ்வளவு காலத்துக்கு என்பதெல்லாம் கடன் வழங்குநரே தீர்மானிப்பார். ஆனால், உள்நாட்டு கடன் விடயத்தில் இவை அனைத்தையும் கடனாளியான அரசாங்கமே தீர்மானிக்கிறது.

உதாரணமாக, வங்கிகள் ஏற்கெனவே தமது வருமானத்தில் 50 சத வீதத்தை வரிகளாகவும் வேறு விதமாகவும் அரசாங்கத்துக்கு செலுத்தி வருவதால் இந்த விடயத்தில் வங்கிகளுக்கு மேலும் பழுவை சுமத்த முடியாது என்று அரசாங்கம் முடிவு செய்துள்ளது. அதற்குப் பதிலாக சேமலாப நிதியத்திடமிருந்து தாம் பெற்ற கடனுக்கான வட்டியை 9 வீதமாக குறைத்தே வழங்குவோம் என்று அரசாங்கம் முடிவு செய்து அறிவித்துள்ளது.

தோட்டத் தொழிலாளர்கள் உள்ளிட்ட ஏனைய ஊழியர்களின் சந்தாப் பணத்தைக் அரசாங்கத்துக்கு கடனாக வழங்கும் சேமலாப நிதியமோ தோட்டத் தொழிலாளர்களோ ஏனைய துறைகளின் ஊழியர்களோ அதற்கு எதிராக எதையும் செய்ய முடியாது.

ஆட்சியாளர்களின் ஊழல், மோசடி, வீண் விரயம் மற்றும் நிர்வாக சீர்கேடு ஆகியவற்றின் காரணமாகவே பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது. அதிலிருந்து மீள்வதற்காக நாணய நிதியத்திடம் உதவி கோரப்பட்டது. நாணய நிதியம் வெளிநாட்டு கடன் மறுசீரமைப்பு வேண்டும் என்றது. வெளிநாட்டு கடன் வழங்குநர்கள் உள்நாட்டு கடன் மறுசீரமைப்பை செய்துவிட்டு வாருங்கள் என்றனர். அப்போது அரசாங்கம் ஊழியர் சேமலாப நிதியத்தின் ஊழியர்களுக்கான வட்டி வீதத்தை குறைத்தது.

அதாவது நாட்டின் பொருளாதாரத்தை சீரழித்தவர்கள் நாட்டை மீட்டெடுக்கவென அவர்களது நிர்வாக சீர்கேட்டால் ஏற்கெனவே பாதிக்கப்பட்ட ஏழைகள் மீதே மீண்டும் பழுவை சுமத்துகிறார்கள்.

நாணய நிதியம் கடன் மறுசீரமைப்புக்குப் புறம்பாக நிதித்துறையில் வேறு பல சிர்த்திருத்தங்களையும் அரசாங்கத்துக்கு பரிந்தரை செய்தது. வரிகளை அதிகரிப்பது மற்றும் செலவுக்கேற்ப மின்சாரத்தினதும் எரிபொருட்களினதும் விலையை அதிகரிப்பது அதில் முக்கிய விடயமாகும். வர்த்தகர்கள் போன்றவர்கள் மீது விதிக்கப்பட்ட அவ்வரியில் பெரும்பகுதியும் இறுதியில் சாதாரண மக்கள் மீதே சுமத்தப்பட்டது.

நாட்டை பொருளாதார ரீதியில் மீட்பதற்கான இந்தத் திட்டத்தின் கீழ் நாணய நிதியம் 4 ஆண்டுகளில் இலங்கைக்கு 2.9 பில்லியன் டொலர்களை கடனாக வழங்க இருக்கிறது. அதன் முதல் தவணையாக 330 மில்லியன் டொலர் கடந்த மார்ச் மாதம் வழங்கப்பட்டது. இரண்டாவது தவணைத் தொகையை வழங்கு முன் தாம் விதித்த நிபந்தனைகளை அரசாங்கம் நிறைவேற்றியிருக்கிறதா என்பதை அறிய கடந்த மாத இறுதியில் நாணய நிதியம் தூதுக்குழுவொன்றை அனுப்பியது.

போதியளவு வருமானம் திரட்டப்படவில்லை என்றும் வெளிநாட்டு கடன் மறுசீரமைப்பு தொடர்பான பேச்சுவாரத்தைகள் பூர்த்தியாகவில்லை என்றும் அத்தூதுக் குழுவினர் கூறியதை அடுத்து கடன் தொகையில் இரண்டாவது தவணைத் தொகையை வழங்குவதை நாணய நிதியம் காலவரையறையின்றி ஒத்தி வைத்துள்ளது.

எனவே இப்போது அரசாங்கம் வருமானத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுத்து வருகிறது. அதற்காகவும் பொது மக்கள் மீதே சுமை ஏற்றப்படுகிறது. கடந்த வாரம் நாணய நிதியத்தின் தூதுக்குழு இரண்டாவது தவணைத் தொகையைப் பற்றிய நிதியத்தின் முடிவை அறிவித்த உடனேயே லங்கா மின்சார கம்பனி (லெக்கோ) சமூக பாதுகாப்பு வரியொன்றை மின்சார பாவனையாளர்களிடம் அறவிடுவதாக அறிவித்தது.

கடந்த இரண்டு வருடங்களில் மின் கட்டணம் ஐந்து மடங்காக அதிகரிக்கப்பட்டு இருக்கும் நிலையில், மீண்டும் மின் கட்டணத்தை அதிகரிக்க இலங்கை மின்சார சபை ஸ்ரீ லங்கா பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவிடம் அனுமதி கோரியுள்ளது.

மாதாந்தம் அல்ல, நாளாந்தம் பல இலட்சக் கணக்கு ரூபாய் வருமானம் பெறும் உயர் அதிகாரிகள், வர்த்தகர்கள், பாரிய நிறுவனங்கள் தாம் அரசாங்கத்துக்கு செலுத்த வேண்டிய வரியை செலுத்தாதிருக்கும் நிலையிலேயே அரசாங்கம் இவ்வாறு சாதாரண மக்கள் மீது மென்மேலும் பொருளாதார சுமையை சுமத்துகிறது. வரி ஏய்ப்பாளர்கள் உரிய முறையில் வரி செலுத்தாத காரணத்தால் நிலுவையிலுள்ள வரித் தொகை 95,000 கோடி ரூபாவாகும்.

இதற்குப் புறம்பாக உள்நாட்டு வருவாய், கலால், சுங்கம் ஆகிய திணைக்களங்களின் அதிகாரிகளின் ஊழல் மற்றும் திறமையின்மை காரணமாக திறைசேரி வருடமொன்றுக்கு 50,000 கோடி ரூபாவை இழப்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது..

வரி செலுத்தும் அளவுக்கு வருமானம் பெற்றும் வரி செலுத்தாதவர்களின் எண்ணிக்கை இலட்சக்கணக்காகும் என உள்நாட்டு வருவாய்த் திணைக்களமே கூறுகிறது. வரிச் செலுத்துவதற்கான குறைந்தபட்ச மாதாந்த வருமானம் இரண்டரை இலட்சத்திலிருந்து ஒரு இலட்சமாக குறைக்கப்பட்டது. ஆனால் வரி செலுத்துவோரின் எண்ணிக்கையில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு இல்லை எனவும் அத்திணைக்களம் கடந்த ஜூலை மாதம் தெரிவித்தது.

ஓகஸ்ட் மாதம் அத்திணைக்களம் வெளியிட்ட ஓர் அறிக்கையின்படி திணைக்கள அதிகாரிகள் வரி ஏய்ப்பாளர்களிடம் இலஞ்சம் பெறுவதாக தெரிகிறது. அது தொடர்பாக திணைக்களம் அதிகாரிகளையும் வரி செலுத்த வேண்டியவர்களையும் அவ்வறிக்கை மூலம் எச்சரித்தது.

இலங்கைக்கே அரிசி விநியோகிக்கும் அரிசி ஆலையொன்றின் உரிமையாளர் கடந்த 15 வருடங்களாக பத்து இலட்சம் ரூபாய் மட்டுமே வரியாக செலுத்தியுள்ளார் என்று பாராளுமன்றத்தின் தேசிய பொருளாதாரம் மற்றும் பௌதிக திட்டமிடல் மேற்பார்வைக் குழுவின் தவிசாளர் மஹிந்தானந்த அலுத்கமகேயை மேற்கோள் காட்டியிருந்தது.

மஹிந்தானந்தவின் அரசியல் நாகரிகம் தொடர்பாக பலர் கேள்வி எழுப்பலாம். அவை நியாயமாகவும் இருக்கலாம் ஆனால் அவர் பாராளுமன்றத்தின் குழுவொன்றினால் கண்டுபிடிக்கப்பட்ட தகவல்களையே மஹிந்தானந்த கூறுகிறார்.

இந்த நிலைமையை மாற்றி அமைக்காமல் ஏழைகளை பிழிந்து எடுத்து நாட்டை அபிவிருத்தி செய்யலாம் என்று அரசாங்கத்தின் தலைவர்கள் நினைப்பதாக இருந்தால் அது வெறும் மாயையே தவிர வேறொன்றுமல்ல.



## வாழ்வியல் தரிசனம்

தான் வாழும் சமூகத்திற்கு எந்த நன்மைகளும் செய்யாமல், பிறருக்கு வேண்டுமென்றே தீமைகளைச் செய்பவர்கள், கடவுளிடம் வரம் கேட்பதில் என்ன நியாயம் இருக்கிறது.

வெளியில் உத்தமராகக் காட்டுபவர்கள், தாம் செய்யும் செயல்கள் மக்களுக்குத் தெரியாது என தப்புக்கணக்கு போடுகின்றார்கள். இத்தகையோர் அடையும் தருப்திதான் என்ன?

எவருக்காவது நன்மைகள் செய்யும்போது, ஏற்படும் திருப்தி, அலாதியானது பொது நலத்தொண்டுகளில் இளைய தலைமுறையினர் ஈடுபடுவது மகிழ்ச்சியானது.

தெருவோரத்தில் கண்டெடுத்த பணப்பையை, உரியவரிடம் கையளிக்கும் நிகழ்வுகளை தினமும் பத்திரிகைகளில், படித்திருக்கின்றோம்.

ஒருவருக்கு உதவுவது எமது இதயத்தை குளிரவைக்கும் செயலாகும். புற அழகை விட, அக அழகே பெரிது. மக்களை நேசிக்கும்போது, யாவரும் எம்மவர்கள் என்ற எண்ணங்கள் உருவாகின்றன.

உலக மக்கள் துன்பங்களைக் கண்டு திரும்பிப் பார்க்காமல் செல்வது மானிட தர்மம் இல்லை. இரக்கம் இல்லாமல் வாழ்பவன், நிம்மதியாக வாழ முடியாது. அன்பே அறம்.

பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### கரும்புத்தோட்டக் காணி பகிர்ந்தளிப்பில் அநீதி

கிளிநொச்சி ஸ்கந்தபுரம் கரும்புத் தோட்டக் காணி விவசாய நடவடிக்கைகளுக்காக பகிர்ந்தளிக்கப்பட்ட விடயத்தில் அநீதி இழைக்கப்பட்டுள்ளதாக பிரதேச பொது மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

சுமார் 196 ஏக்கர் பரப்பளவு கொண்ட கரும்புத்தோட்டக் காணியானது அதன் ஆரம்ப குத்தகைதார்களது குத்ததை காலம் நிறைவுற்றதும் அவர்களது உறவினர் ஒருவர்தொ டர்ந்தும் பராமரித்து வந்துள்ளார். இந்த நிலையில் குறித்த காணியின்வி டயத்தில் தலையிட்ட மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு அந்தக் காணியை மீட்டு காணிகளற்ற ஏழை பொது மக்களுக்கு விவசாய நடவடிக்கைகளுக்காக வழங்கப்போவதாக அறிவித்து பல கூட்டங்களை நடாத்தியிருந்தனர்.

இறுதியில் குறித்த காணி பிரித்து விவசாய நடவடிக்கைக்கு பலருக்கு, மாவட்டஒருங்கிணைப்புக் குழுவினால் வழங்கப்பட்டது.

தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளில் பெரும்பாலானவர்கள் அவர்கள் குறிப்பிட்டது போன்று

காணிகள் அற்ற ஏழைகள் அல்ல எனவும் குறித்த ஒரு கட்சியின் ஆதரவாளர்கள்ள ன்றும் பொது மக்களால் பெயர் விபரங்களுடன் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனவேதான் குறித்த காணி பகிர்ந்தளிப்பில் இடம்பெற்ற அநீதியை கருத்தில்எ டுத்து அதனை மீள் பரிசீலனை செய்யுமமாறு பாதிக்கப்பட்டுள்ள பொது மக்கள்கோரிக்கை விடுத்துள்ளனர்.

மு.தமிழ்ச்செல்வன்




### சிங்களச் சனத்தொகை வீழ்ச்சியடைகிறதா?

# கம்மன்பிலவின் தவறான எச்சரிக்கையாகும்

கொழும்பு நகரத்தின் சிங்கள சனத்தொகை பாதியளவாகக் குறைந்துள்ளதா?

பாராளுமன்ற உறுப்பினரின் கூற்றைச் சரிபார்க்க, தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் 1981 மற்றும் 2012 கணக்கெடுப்புகளை FactCheck.lk ஆராய்ந்தது. கணக்கெடுப்பில் "கொழும்பு நகரம்" என வரையறுக்கப்படவில்லை. 2012 கணக்கெடுப்பு மாவட்ட மட்டம் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவு (DSD) மட்டத்தினாலான தரவை மட்டுமே வழங்குகிறது. 1981 கணக்கெடுப்பு மாவட்ட மட்டம் மற்றும் பிரதி அரசாங்க அதிபர் பிரிவு (AGA) மட்டத்தினாலான தரவை வழங்குகிறது. இது DSDகளுக்கு முன்னோடியாக இருந்தது. எனவே, பாராளுமன்ற உறுப்பினரின் கூற்றை முழுமையாகப் புரிந்துகொள்ள FactCheck.lk இரண்டு பகுதிகளை கவனத்தில் கொண்டது. (1) கொழும்பு மாவட்டம் மற்றும் (2) கொழும்பு மாநகர சபை பகுதிகளுடன் பொருந்தக்கூடிய AGA பிரிவு அல்லது DSDகள், 1981ஆம் ஆண்டில் கொழும்பு AGA மற்றும் 2012ஆம் ஆண்டில் கொழும்பு மற்றும் திம்பிரிகஸ்யாய DSDகள்.

தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தின் தரவு 1981 முதல் 2012 காலப்பகுதியில் சிங்களவர்களின் சனத்தொகை கொழும்பு மாநகரசபை பகுதியில் குறைந்துள்ளதை அட்டவணை 1 சுட்டிக்காட்டுகிறது. இந்த வீழ்ச்சியானது 30 சதவீதத்திற்கும் (29.7%) குறைவானதாகும். பாராளுமன்ற உறுப்பினர் குறிப்பிடுவது போன்று பாதியாக இல்லை. நகரத்திலுள்ள சிங்கள சனத்தொகை 2012ஆம் ஆண்டில் பாராளுமன்ற உறுப்பினர் குறிப்பிடுவதைப் போன்று 28% அல்லாமல் 36.75 சதவீதமாக உள்ளது.

1981ஆம் ஆண்டு கொழும்பு மாநகர சபை எனக் குறிப்பிடப்பட்ட பகுதி அதன் பின்னர் கொழும்பு மற்றும் திம்பிரிகஸ்யாய என இரண்டு பிரிவுகளாக பிரிக்கப்பட்டன. இதன் காரணமாகவே பாராளுமன்ற உறுப்பினர் தவறாகக் குறிப்பிடுகிறார் எனக் கருதலாம். 1981ஆம் ஆண்டில் மொத்தப் பகுதியின் சனத்தொகையை 2012 கணக்கெடுப்பில் ஒரு பகுதியுடன் அவர் (கொழும்பு DSDயுடன் மட்டும்) ஒப்பிடுகிறார் எனத் தெரிகிறது.

கொழும்பில் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களின் வருகையால் சிங்கள சனத்தொகை ஓரங்கட்டப்படுவது குறித்து இன ரீதியிலான எச்சரிக்கை எழுப்பும் நோக்கத்திற்கு பாராளுமன்ற உறுப்பினர் கொழும்பு மாநகர சபையில் கவனம் செலுத்துவது பொருத்தமற்றது. நகரங்கள் அபிவிருத்தியடையும்போது தனிப் போக்குவரத்தைக் கொண்ட செல்வந்தர்கள் தங்கள் வீடுகளை புறநகர் பகுதிக்கு மாற்றிக்கொள்கின்றனர். இது பெருநகரத்தின் பகுதியாக மாறும். கொழும்பில் முன்னர் காணப்பட்ட மாநகர சபை எல்லைகள் மட்டுமன்றி தற்போது ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டை (புதிய தலைநகரம்), தெகிவளை மற்றும் மவுண்ட் லவனியா என நகரம் விரிவடைந்துள்ளது.

1981 முதல் 2012 இடையிலான காலப்பகுதியில் கொழும்பு பெருநகரப் பகுதி உட்பட மாவட்ட மட்டத்தில், சிங்கள மக்களின் சனத்தொகை குறையவில்லை. மாறாக 450,000க்கும் மேலாக (34.5% அதிகரிப்பு) அதிகரித்துள்ளது. ஒட்டுமொத்த சிங்கள சனத்தொகை குறைந்துள்ளது, ஆனால், அது மிகச்சிறிய சதவீதமாகும். அதாவது 77.88 சதவீதத்திலிருந்து 76.54 சதவீதமாகக் குறைந்துள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் இரண்டு தவறுகளைச் செய்கிறார்: (1) 1981 கொழும்பு மாநகர சபைப் பகுதியின் சிங்கள சனத்தொகையுடன் 2012ஆம் ஆண்டின் மிகச் சிறிய கொழும்பு DSD பிரிவின் சனத்தொகையை அவர் தவறாக ஒப்பிடுகிறார். (2) பாரிய கொழும்பு பகுதி மற்றும் மாவட்டத்தில் (அவரது மதிப்பீட்டிற்கு இதுவே பொருத்தமானதாக இருக்கும்) சிங்கள சனத்தொகையில் அதிகரிப்பே (குறைவு இல்லை) காணப்படுகிறது, சனத்தொகையின் சதவீதத்தில் மட்டும் சிறிய அளவிலான வீழ்ச்சி காணப்படுகிறது.

ஆகவே அவரது அறிக்கையை நாங்கள் தவறானது என வகைப்படுத்துகிறோம்.

*பகிரங்கமாகப் பொதுவெளியில் கிடைக்கக்கூடிய அண்மைத் தகவல்களை அடிப்படையாகக் கொண்டே FactCheck.lk தனது முடிவுகளை எட்டுகின்றது. புதிய தகவல்கள் கிடைக்கும் பட்சத்தில் இந்த மதிப்பீடுகளை FactCheck.lk மறுபரிசீலனை செய்யும்.









# சாஹிராவில் 03 நாள் முகாம்

கல்முனை சாஹிரா கல்லூரியில் 03 நாட்கள் கொண்ட சாரணர் பயிற்சி முகாம் கல்லூரியில் நடைபெற்றது.
சாரணர்களுக்கான போக்குவரத்து சமிக்ஞைகள், திசைகாட்டி வரைபடம், துனிகர செயற்பாடுகள், தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம் சம்பந்தமான விரிவுரை, தீப்பாசறை, போதைப் பொருளை ஒழிப்போம் சம்பந்தமான நடை பவனி, பாத்திரமின்றி சமைக்கும் முறைமை, சாரணர்கள் தங்கியிருக்கும் Hut பரிசோதனை, குறியீடுகள், நில அளவைகள் சம்பந்தமான விரிவுரைகளும் பயிற்சிகளும், கட்டு முறைகள் போன்ற பல செயற்பாடுகளுடன் கூடிய நிகழ்வுகள் நடைபெற்றது.

நூருல் ஹுதா உமர்





# உதவிகள் வழங்கி வைப்பு

கிளிநொச்சி மாற்றுத் திறனாளிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் லண்டனில் உள்ள புலம் பெயர் உறவுகளின் உதவியுடன் மாற்றுத்திறனாளிகள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களுக்கு உதவிகள் வழங்கி வைக்கப்பட்டன.
கோழி வளர்ப்பு, தோட்டம் செய்வதற்காக இரண்டு பயனாளிகளுக்கு 50,000 ரூபாயும், வயலுக்கு நீர் இறைக்கும் இயந்திரத்தை கொள்வனவு செய்ய ஒருவருக்கு 65,000 ரூபாயும் வழங்கி வைக்கப்பட்டது. பயனாளி ஒருவருக்கு 42,000 ரூபாய் செலவில் துவிச்சக்கர வண்டியும் மேலும் போரினால் பாதிக்கப்பட்டு தற்போது போராளி குடும்பங்களாகவும், மாவீரர் குடும்பங்களாகவும் வாழ்ந்துவரும் 20 பேருக்கு உலருணவுப் பொருள்களும் வழங்கி வைக்கப்பட்டன.

தமிழ்ச்செல்வன்





# பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு


கிழக்கு மாகாண பாடசாலை மாணவர்களுக்கு இடையிலான மெய்வல்லுநர் போட்டியில் வெற்றி பெற்று சாதனை படைத்த அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரி மாணவர்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு கல்லூரி வளாகத்தில் இடம்பெற்றது.
அதிபர் ஏ.எச்.பௌஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வின்போது, சாதனை மாணவர்கள் வீதி வழியாக மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டு பேண்ட் வாத்திய இசை வழங்கி ஊர்வலமாய் அழைத்து வரப்பட்டனர்.
மாகாண மட்டத்தில் திறமை காட்டி சாதனை படைத்த மாணவர்கள், அவர்களை வழிப்படுத்திய ஆசிரியர்கள் மற்றும் விளையாட்டு பயிற்றுவிப்பாளர்கள் ஆகியோர் இதன்போது பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

எம்.ஏ.றமீஸ்




# சிறுவர் தினமும் மீலாதுன் நபி சிறப்பு நிகழ்வும்

எம்.எஸ்.எம்.ஸாகிர்





கல்முனை கல்வி வலயத்தின் சாய்ந்தமருது கோட்டத்துக்கு உட்பட்ட அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலையில் (GMMS) சர்வதேச சிறுவர் தினம் மற்றும் மீலாதுன் நபி விழா ஆகியன அதிபர் எம்.ஐ.எம். இல்யாஸ் தலைமையில் ஞாயிற்றுக்கிழமை (01) நடைபெற்றன.
" எல்லாவற்றையும் விட சிறுவர்கள் பெறுமதியானவர்கள்" எனும் தொனிப்பொருளில் சாய்ந்தமருது அல்-ஹிலால் வித்தியாலயத்தினதும், கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரியினதும் முன்னாள் அதிபரும் சாய்ந்தமருது த:.வா இஸ்லாமிய கலாபீடத்தின் அதிபருமான ஐ.எல்.ஏ. மஜீதினால் சிறப்புரையாற்றப்பட்டது.



# சிறுவர் தினைத்தையொட்டி...



உலக சிறுவர் தினத்தை சிறப்பிக்கும் வகையிலும், சிறுவர்களிடையே சேமிப்பு பழக்கத்தை ஊக்குவிக்கும் பொருட்டும், கோமாரி மெதடிஸ்த மிஷன் தமிழ் மகா வித்தியாலயத்தில் சிறுவர் தின கலை மற்றும் விளையாட்டுப் போட்டிகளைக் கொண்ட நிகழ்வு திங்கட்கிழமை (02) இடம்பெற்றன.

எம்.எப்.றிபாஸ்



# "பிள்ளைகள் பெறுமதியானவர்கள்"

சர்வதேச சிறுவர் தினத்தையொட்டி சிறுவர்களின் பாதுகாப்பு , உரிமைகள் தொடர்பான விழிப்பூட்டும் வகையில், வாகனங்களில் ஸ்டிக்கர் ஒட்டுதல் மற்றும் துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கும் நிகழ்வு தம்பலகாமம் பிரதேச செயலாளர் தலைமையில் திங்கட்கிழமை (02) இடம்பெற்றது.
"எல்லாவற்றையும் விடவும் பிள்ளைகள் பெறுமதியானவர்கள்" என்ற தொனிப்பொருளின் கீழ் இம்முறை சிறுவர் தின நிகழ்வுகள் இடம் பெற்றன.

ஹஸ்பர்







# சிறுவர்,மாணவர் தலைவர் தினம்.

கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரியின் சர்வதேச சிறுவர் தின நிகழ்வும், மாணவர் தலைவர்களுக்கான தினமும் கல்லூரியின் அதிபர் அருட் சகோதரர் றெஜினோல்ட் தலைமையில் செவ்வாய்க்கிழமை (02) சிறப்பாக நடைபெற்றது.

வி.ரி.சகாதேவராஜா


பின்லாந்து

# டிஜிட்டல் கடவுச்சீட்டு அறிமுகம்

உலகில் முதன்முதலில் ஸ்மார்ட்போன் செயலி அடிப்படையில் செயல்படும் டிஜிட்டல் கடவுச்சீட்டை பின்லாந்து அறிமுகம் செய்துள்ளது. ஃபின்ஏர், ஃபின்னிஸ் பொலிஸ் மற்றும் ஃபின்ஏவியா விமான நிலைய ஆப்ரேட்டருடன் இணைந்து டிஜிட்டல் கடவுச்சீட்டுக்கான ஒரு பைலட் திட்டத்தை பின்லாந்து அரசு தொடங்கியது.

டிஜிட்டல் கடவுச்சீட்டு என்பது மொபைல் செயலியை அடிப்படையாக கொண்டது. இது, பயணிகள் தங்கள் கடவுச்சீட்டு தகவல்களை ஸ்மார்ட்போனில் சேமித்து வைத்து, தேவையான இடங்களில் உடனடியாக பயன்படுத்திக்கொள்ள உதவுகிறது.

இந்த டிஜிட்டல் கடவுச்சீட்டுத் திட்டம் சோதனை அடிப்படையில் பெப்ரவரி 2024 வரை செயல்படுத்தப்படவுள்ளது. அதன் பிறகு, இத்திட்டத்தில் உள்ள நிறைகுறைகளை ஆராய்ந்து, நாடு முழுவதும் செயல்படுத்துவது குறித்து பரிசீலிக்கப்படும் என்று பின்லாந்து அரசு தெரிவித்துள்ளது.






பாகிஸ்தான்


## இம்ரான்கான் குற்றவாளி

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான்கான் மற்றும் அவரது உதவியாளர் முகமது குரேஷி ஆகியோர் மீது அரசு ரகசியங்களை வெளிப்படுத்தியதாக குற்றம்சாட்டப்பட்டது. சைபர் வழக்கு என அறியப்படும் இந்த வழக்கு விசாரணை பாகிஸ்தானின் சிறப்பு நீதிமன்றத்தில் நடைப்பெற்றது.

இதில் அவர்கள் மீதான குற்றச்சாட்டு உறுதியானதால் இருவரையும் குற்றவாளிகள் என நீதிமன்றம் அறிவித்துள்ளது. இம்ரான்கான், ஏற்கெனவே தோஷகானா ஊழல் வழக்கில் கைது செய்யப்பட்டு நீதிமன்ற காவலில் அடைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அமெரிக்கா

## மருத்துவத்துக்கான நோபல் பரிசு அறிவிப்பு



ஸ்வீடனை சேர்ந்த விஞ்ஞானி ஆல்ஃப்ரெட் நோபல் நினைவாக, ஆண்டுத்தோறும் மருத்துவம், இயற்பியல், வேதியியல், பொருளாதாரம், அமைதி, இலக்கியம் என 6 துறைகளின் கீழ் மகத்தான சாதனை படைத்தவர்களுக்கு நோபல் பரிசு வழங்கப்படுகிறது.

அந்த வகையில், 2023ம் ஆண்டின் மருத்துவத்திற்கான நோபல் பரிசு அமெரிக்காவை சேர்ந்த கேட்டலின் கரிக்கோ மற்றும் வீய்ஸ்மேனுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. நியூக்ளியோசைடு மூலக்கூறுகள் மாற்றம் தொடர்பாக இவர்களின் கண்டுபிடிப்பு கொரோனா நோய்த் தொற்றின் போது, எம்ஆர்என்ஏ தடுப்பூசி தயாரிக்கப்பட்ட காரணமாக அமைந்துள்ளது.


இந்நிலையில், பல்லாயிரக்கணக்கான உயிர்களை காப்பாற்றுவதற்கு காரணமாக அமைந்த விஞ்ஞானிகள் தற்போது நோபல் பரிசு மூலம் கௌரவிக்கப்பட்டுள்ளனர். நடப்பாண்டு நோபல் பரிசு தொகை 8 கோடியாக அதிகரிக்கப்பட்டு இருப்பதும் குறிப்பிடத்தக்கது.


மகாராஷ்டிரா

## தாலியை விழுங்கிய எருமை

மகாராஷ்டிரா மாநிலம் வாஷிம் மாவட்டத்தில் பெண் ஒருவர் குளிக்கச் செல்லும் முன்பு தாலி சங்கிலியை கழற்றி, உணவுத் தட்டு ஒன்றில் மறைத்து வைத்துள்ளார். அதனை மறந்த அவர், எருமைமாட்டிற்கு அதே தட்டில் உணவு வைத்துள்ளார். அப்போது உணவோடு உணவாக தாலி சங்கிலியையும் அந்த எருமைமாடு விழுங்கியுள்ளது.

சிறிது நேரத்திற்கு பிறகு தாலி காணாமல் போனதை உணர்ந்த அப்பெண் வீடு முழுவதும் தேடியுள்ளார். அதன் பிறகே, மாட்டிற்கு உணவு வைத்த தட்டில் தாலியை வைத்திருந்தது அவருக்கு நினைவுக்கு வந்துள்ளது. தகவல் அறிந்து விரைந்த கால்நடை மருத்துவர், எருமையின் வயிற்றில் தாலி இருப்பதை உறுதி செய்தார். இதனை தொடர்ந்து சுமார் 2 மணி நேர அறுவை சிகிச்சைக்கு பிறகு எருமையின் வயிற்றில் இருந்து தாலி சங்கிலி மீட்கப்பட்டது.





டெல்லி

## இ–சிகரெட் வைத்திருப்பது குற்றம்

மின்னணு சிகரெட் தடை சட்டத்தை மத்திய அரசு கடந்த 2019-ம் ஆண்டு, கொண்டு வந்தது. அதன்படி, இ-சிகரெட் எனப்படும் மின்னணு சிகரெட்டுகளை உற்பத்தி, ஏற்றுமதி, இறக்குமதி, விற்பனை , வினியோகம் செய்தல், இருப்பை வைத்தல், விளம்பரம் செய்தல் ஆகியவற்றுக்கு தடை விதிக்கப்பட்டது.

இ-சிகரெட்டின் தனிப்பட்ட பயன்பாட்டுக்கு தடை விதிக்கப்படுவதாக அதில் குறிப்பிடப்படவில்லை . இதற்கிடையே, இ-சிகரெட் தடை சட்டத்தில், சிறைத்தண்டனை , அபராதம் போன்ற கடுமையான விதிமுறைகள் இருப்பதையும் மீறி, இ-சிகரெட் சர்வசாதாரணமாக புழங்குவதாக மத்திய அரசுக்கு புகார்கள் வந்துள்ளன.

இதையடுத்து, இ-சிகரெட் தடையை உறுதியுடன் அமல்படுத்துமாறு அனைத்து மாநில அரசுகளுக்கும் மத்திய அரசு கடிதம் எழுதியுள்ளது. மேலும், அந்த சிகரெட்டை விற்பனை செய்த 15 இணையதளங்களுக்கு நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

கேரளா

## குழந்தையின் நுரையீரலில் சிக்கிய எல்.இ.டி. பல்ப்



கேரள மாநிலம் கோட்டயம் பகுதியை சேர்ந்த 7 மாத குழந்தைக்கு திடீரென தொடர் இருமல் மற்றும் மூச்சுத்திணறலால் அவதிப்பட்டது. இதையடுத்து அந்த குழந்தையை கோட்டயத்தில் உள்ள தனியார் வைத்தியசாலைக்கு பெற்றோர் கொண்டு சென்றனர்.

அங்கு குழந்தையை பரிசோதித்ததில், குழந்தையின் நுரையீரலின் கீழ் பகுதியில் ஏதோ ஒரு பொருள் சிக்கியிருப்பதை கண்டறிந்தனர். அதனால் தான் குழந்தைக்கு தொடர் இருமல் ஏற்பட்டது மட்டுமின்றி, மூச்சுத்திணறலும் ஏற்பட்டிருப்பது தெரியவந்தது. இதையடுத்து குழந்தைக்கு மூச்சுக்குழாய் பரிசோதனை செய்யப்பட்டது.

அதில் குழந்தையின் வலது நுரையீரலில் சிவப்பு நிற சிறிய எல்.இ.டி.பல்ப் சிக்கியிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. அதனை வைத்தியர்கள் அறுவை சிகிச்சை செய்து உடனடியாக அகற்றினர்.

குழந்தை விளையாடிய பொம்மையில் இருந்து எல்.இ.டி. பல்ப் தெரியாமல் வாய் வழியாக உடலுக்குள் சென்றிருக்கலாம் என்றும், இதுபோன்ற நிகழ்வு மிகவும் அரிதாக நடக்கக்கூடியது எனவும் உயிருக்கு ஆபத்தில்லாத விளையாட்டு பொருட்களையே குழந்தைகளுக்கு கொடுக்க வேண்டும் எனவும் மருத்துவர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

ஆசியப் போட்டிகளில் ஆண்களுக்கான கிரிக்கெட்:

## நேபாளத்தை வென்று அரையிறுதியில் இந்தியா



சீனாவில் நடைபெற்று வரும் ஆசியப் போட்டிகளின் ஆண்களுக்கான கிரிக்கெட்டில் அரையிறுதிப் போட்டிக்கு இந்தியா தகுதி பெற்றுள்ளது.

ஹங்சூவில் நேற்று நடைபெற்ற நேபாளத்துடனான முதலாவது காலிறுதிப் போட்டியில் வென்றமையைத் தொடர்ந்தே அரையிறுதிப் போட்டிக்கு இந்தியா தகுதி பெற்றுள்ளது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: இந்தியா

இந்தியா: 202/4 (20 ஓவ. )

(துடுப்பாட்டம்: யஷஸ்வி ஜைஸ்வால் 100 (49), ரிங்கு சிங் ஆ.இ 37 (15), ஷிவம் டுபே ஆ.இ 25 (19), ருத்துராஜ் கைகவாட் 25 (23) ஓட்டங்கள். பந்துவீச்சு: டிபேந்திர சிங் ஐரீ 2/31 [4])

நேபாளம்: 179/9 (20 ஓவ. )

(துடுப்பாட்டம்: டிபேந்திர சிங் ஐரீ 32 (15), சுந்தீப் ஜொரா 29 (12), குஷால் மல்லா 29 (22), குஷால் புர்டேல் 28 (32), கரன் கே.சி ஆ.இ 18 (13) ஓட்டங்கள். பந்துவீச்சு: ரவி பிஷ்னோய் 3/24 [4], ஆவேஷ் கான் 3/32 [4], சாய் கிஷோர் 1/25 [4])

இதேவேளை இரண்டாவது காலிறுதிப் போட்டியில் ஹொங் கொங்கை வீழ்த்திய பாகிஸ்தானும் அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

இந்நிலையில் இன்று காலை 6.30 மணிக்கு நடைபெறவுள்ள மூன்றாவது காலிறுதிப் போட்டியில் ஆப்கானிஸ்தானை இலங்கை எதிர்கொள்ளவுள்ளதுடன், முற்பகல் 11.30 மணிக்கு நடைபெறவுள்ள நான்காவது காலிறுதிப் போட்டியில் மலேஷியாவை பங்களாதேஷ் எதிர்கொள்ளவுள்ளது.

ஷாதுலிய்யா வித்தியாலய வரலாற்றில்

## மாகாண மட்ட போட்டிகளில் சாதனை படைத்த நஷீம்



மாகாண மட்ட மெய்வல்லுனர் திறனாய்வுப் போட்டியில், மட்டக்களப்பு மத்தி கல்வி வலயப் பாடசாலையான பிறந்துரைச்சேனை ஷாதுலிய்யா வித்தியாலயத்தின் சார்பாக பங்கேற்ற மாணவன் என்.எம். நஷீம் 12 வயதுக்குட்பட்ட பிரிவில் 100 மீற்றர் ஓட்டப்போட்டியில் இரண்டாமிடத்தைப் பெற்று பாடசாலை வரலாற்றின் முதலாவது மாகாண மட்ட போட்டிகளுக்கான பதக்கத்தை வென்று சாதனை படைத்து பிறந்துரைச்சேனை மண்ணுக்கும் மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்துக்கும் பெருமை சேர்த்துள்ளார்.

இந்த மாணவனை பாராட்டும் முகமாக பாடசாலை அதிபர் ஜனாப் எம்.எல் . கலீல் ரஹ்மான் அவர்கள் தலைமையில் பாடசாலை வளாகத்தில் வரவேற்பு வைபவம் ஏற்பாடு செய்யப்பட்டது.

இதன்போது உரையாற்றிய பாடசாலை அதிபர் இந்த பாடசாலைக்கு பெருமை சேர்த்த மாணவனுக்கும் விளையாட்டு துறையில் மாணவர்களை வழிநடத்திய உடற்கல்வி ஆசிரியர் ஜமீல் ஆர் கபூரி மற்றும் விளையாட்டு பயிற்றுவிப்பாளர்களான அலி அக்பர் எம் இர்பான் மற்றும் வபாஸ் மொகமட் ஆகியோருக்கும் தனது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்தார்.

வட மாகாணத்தில் மாணவர்கள் மட்டத்திலிருந்து

## 'கிரிக்கெட்டை சர்வதேச மட்டத்துக்கு உயர்த்துவதே இலக்கு'

பு. கஜிந்தன்



வட மாகாணத்தில் மாணவர்கள் மட்டத்திலிருந்து கிரிக்கெட் சர்வதேச மட்டத்துக்கு உயர்த்துவதே இலக்கு என யாழ்ப்பாண மாவட்ட கிரிக்கெட் பயிற்சி நிலைய தலைவர் டாக்டர் ஸ்ரீதரன் கணேஷ்சமுர்த்தி தெரிவித்தார்.

பயிற்சி, மதிப்பீடு தொடர்பாக ஊடகவியாளர்களுக்கு தெளிவுபடுத்தும் ஊடகச் சந்திப்பானது தனியார் விடுதி ஒன்றில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்றது. இதன்போது கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். இதுதொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

"இப்பயிற்சியானது நாளை மறுதினம், அதற்கடுத்த ஆகிய நாள்களில் யாழ்ப்பாணக் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியிலும், எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை வவுனியாவில் நோர்த் ஸ்டார் வலைப்பயிற்சியிலும் நடாத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கு தனியார் கல்வி நிறுவனம், பாடசாலை மாணவர்கள், மாவட்ட சங்கங்கள் ஊடாக பெருமளவிலான ஆதரவு கிடைக்கும் என எதிர்பார்க்கின்றோம். இக்கிரிக்கெட் போட்டியில் 100-க்கும், 150க்கும் இடைப்பட்ட மாணவர்கள் தெரிவு செய்யப்படவிக்கின்றனர். மேலும் அடிமட்டத்தில் இருந்து வருகின்ற மாணவர்களுக்கான பயிற்சிகளும் வழங்கி வருகின்றோம்.

மாவட்ட கிரிக்கெட் சங்கங்கள் ஊடாக கிரிக்கெட் போட்டிகள் நடத்தப்படுகின்றது. இப்பயிற்சியானது காலை 9 மணிக்கு ஆரம்பமாகும். இப்பயிற்சியை ஆரம்பித்து வைப்பதற்கு இலங்கை கிரிக்கெட் பயிற்சி நிலைய தலைமை அதிகாரி சமிந்த வாஸ் கலந்து கொள்ளவுள்ளார்" என்றார்.

உலகக் கிண்ண பயிற்சிப் போட்டிகள்:

## தென்னாபிரிக்காவை வென்ற நியூசிலாந்து




சர்வதேச கிரிக்கெட் சபையின் உலகக் கிண்ணத் தொடருக்கான பயிற்சிப் போட்டிகளில், திருவனந்தபுரத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற தென்னாபிரிக்காவுடனான பயிற்சிப் போட்டியில் மழை குறுக்கிட்ட நிலையில் டக்வேர்த் லூயிஸ் முறைப்படி ஏழு ஓட்டங்களால் நியூசிலாந்து வென்றது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து, டெவோன் கொன்வேயின் 78 (73), டொம் லேதமின் 52 (56), கிளென் பிலிப்ஸின் 43 (40), அணித்தலைவர் கேன் வில்லியம்ஸனின் 37 (51) ஓட்டங்களோடு 8 விக்கெட்டுகளை இழந்து 50 ஓவர்களில் 321 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில், லுங்கி என்கிடி, மார்கோ ஜன்சன் ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா 37 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை இழந்து 211 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது மழை குறுக்கிட்ட நிலையில் அத்தோடு போட்டி முடிவுக்கு வந்திருந்தது. துடுப்பாட்டத்தில், குயின்டன் டி கொக் ஆட்டமிழக்காமல் 84 (89), றஸி வான் டர் டுஸன் 51 (56), ஹென்றிச் கிளாசென் 39 (37) ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில், ட்ரெண்ட் போல்ட் 2, மிற்செல் சான்ட்னெர் ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

இதேவேளை கௌகாத்தியில் நடைபெற்ற மற்றைய பயிற்சிப் போட்டியில் பங்களாதேஷை இங்கிலாந்து வென்றிருந்தது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை 04 ஒக்டோபர் 2023, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.